nowadays. However there are few people who are content with what they have and do not desire for anything especially money. There are few who pass unnecessary comments at both these kinds of people. Whether we lead a good life or lie low in life, we should just ignore people who pass such comments. To obtain peace of mind, the good things specified for that and the good path laid down for that should be adopted and this is considered the best.

In general, who are called as those who do not know how to lead a life? It is referred to those who have lost (sacrificed) their life for others. However others are, following the good things you feel within you till the end, is what is known to be the freedom of every individual. There are many people who run very fast to earn money and there are many people who sacrifice their life for others. Whenever one leads a life based on what he/she feels within (i.e. following one's consciousness), his/her life is bound to be good. The answer provided above is based on My personal experience.

இந்த கால காட்டத்தில் பல மனிதர்கள் மேலும் மேலும் பணம் சம்பாதிகணும் என்று ஆசைபடுகிறார்கள். இன்னொரு பக்கம் சில மனிதர்கள் மற்றவர்களுக்காக தனது வாழ்க்கையை தியாகம் செய்கிறார்கள். நாங்கள் இதை எப்படி புரிந்து கொள்ளவேண்டும்.

பொதுவாக ஒவ்வொரு மனிதரிடமும் எவ்வளவோ நல்ல குணங்கள் உள்ளது. தேவைகள் அதிகமாயிருப்பதால் எதிர்கால வாழ்க்கையை பற்றிய கவலைகள் இருப்பதாலும் சேமிப்புக்களாகவும் தன் ஸ்திதியை (தன் நிலையை) சீராக வைத்துக் கொள்ள வேண்டியும் வசதியான வாழ்க்கை தற்காலத்தில் அவசியமாகிவிட்டது. ஒரு சிலர் இருப்பது போதும் என்று எதற்கும் ஆசைப்படாமல் குறிப்பாக பணம் என்பதை தவிர்த்து வாழ்கிறார்கள். இரண்டு விதமான மனிதர்களுக்கும் ஒரு சிலரால் தேவையற்ற பேச்சுக்கள் வருகிறது. மேலும் வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும் பேசுபவர்களைப்பற்றி நாம் லட்சியம் செய்யலாகாது. மன அமைதி பெற வேண்டுமானால் அதற்குண்டான நல்ல விஷயங்கள், நல்ல மார்கம் உள்ளபடியால் அந்த வழியில் செல்வது சிறப்பு.

பிழைக்க தெரியாதவர்கள் என்று பொதுவாக யாரை கூறுவார்கள் என்றால் மற்றவர்களுக்காக வாழ்க்கையை

தொலைப்பவனை பார்த்து கூறுவார்கள். யார் யார் எப்படியிருந்தாலும் அவரவர் மனது சொல்லும் நல்ல விஷயங்களை கடைசி வரை கடைபிடித்து வாழ்வது என்பது தனி ஒரு மனிதனின் சுதந்திரமாகும். மிக வேகமாக ஓடி ஓடி சம்பாதிப்பார்கள், மற்றவர்களுக்காக வாழ்க்கையை த்யாகம் செய்பவர்கள் என்று பலரும் இருக்கிறார்கள். அவரவர் மனதுப்படி வாழும் போது அவரவர்கள் வாழ்க்கை சிறப்பாகத் தான் இருக்கிறது. இது என் தனிப்பட்ட அனுபவம்.

**18. What are the differences between Jeevaathma, Paramaathma, Antharaathma and Gnanaathma?**

Jeeva (i.e. individual living being) is referred as 'Chaitanyam' (which is Pure Consciousness). In this world, life (i.e. Shakti – power/force/energy) is created by God. For individual living beings the 'Atma' is the heart or soul. Further the term 'Paraman' refers to God and the Atma of the Paraman is referred as 'Paramaatma'. The Atma of the Jeeva is referred as 'Jeevaatma'. When you take the Shakti (i.e. power/force/energy) from one place and join it in another place, so that the others gain Shakthi in that place – this is referred to as 'Chaitanya Sangamam'. What is inside us is the 'Antaraatma'. When this is displayed in different ways/forms, we also have the Paramaatma Swaroopa which is 'Gnanaatma'; hence one becoming many and many becoming one and pervading inside and outside and everywhere is Narayana. Since the Para-devatha is contained in all three - Iccha, Gnana and Kriya, it shines brilliantly in different actions. Atma is one, but when it is present and functions in many, it turns into that particular form.

**ஜீவாத்மா, பரமாத்மா, அந்தராத்மா, ஞானாத்மா - வித்தியாசங்கள் என்ன?**

ஜீவன் என்பது சைதன்யம். உயிர் (சக்தி) லோகத்தில் பகவனால் ச்ருஷ்டிக்கப்பட்டது. முழுதும் ஜீவனே. ஜீவன்களுக்கு ஆத்மா என்பதுதான் மனம். மேலும் பரமன் என்ற சொல் கடவுள். பரமனுடைய ஆத்மா பரமாத்மா. ஜீவனுடைய ஆத்மா ஜீவாத்மா. ஒரு இடத்தில் இருக்கும் சக்தியை மற்றொரு இடத்திற்கு எடுத்து சென்று சேர்ப்பித்து மற்றதை சக்தி பெற செய்வதுதான் சைதன்ய சங்கமம். உள்ளே இருப்பது அந்தராத்மா. அதுபோல பரிமானங்களாக வெளிப்படும்போது பரமாத்மஸ்வரூபமான

ஞானாத்மா, ஆக ஒன்றே பலவாகி, பலதும் ஒன்றாகி உள்ளே வெளியே எங்கும் வியாபித்திருப்பது நாராயணனே. இச்சா, ஞான, க்ரியா முற்றிலும் பரதேவத ஐக்கியமாகி உள்ளதால் அந்தந்த கார்யங்களில் அது பிரகாசிக்கிறது. ஆத்மா என்று அது பலதிலும் ஊடுருவி செயல்படும்போது அந்த வடிவமாகவே ஆகிறது. ஜீவன் + ஆத்மா இரண்டும் ஒன்றாகி பலவாறாக ஆத்ம ஸம்பந்தத்தோடு இருக்கிறது.

## V. Auspicious Functions / மங்களகரமான வைபவங்கள்

### 19. What is the significance of doing Samaradhanai?

Samaradhanai can definitely be performed every year. Whatever be the Yatra we go for, only if we do Samaradhanai when we return to our house does that Yatra become complete. After doing Parihaaram (remedy) Samaradhanai should not be done. Further when we go for a Theertha Yatra or when we visit the Kula Deivam, Samaradhanai should be done. In some houses, based on the family custom Samaradhanai is done for certain deities. Like for example we have the “Sastha Preethi”. This is also considered as Samaradhanai. Generally the custom in our community is that we do Samaradhanai when we return from ‘Kasi Yatra’ (which cannot be avoided); here Samaradhanai should be done definitely. We also have Samaradhanai which is done on the Saturday of Puratasi month, Vaitheeshwaran Kovil Samaradhanai, etc.

### ஸமாராதனையின் முக்கியத்துவம் என்ன?

ஸமாராதனை கண்டிப்பாய் பிரதி வருடம் செய்யலாம். எந்த யாத்திரை சென்றாலும் வீட்டிற்கு ஸமாராதனை செய்தால் தான் யாத்திரை பூர்த்தி. பரிகாரம் செய்து விட்டு வந்தால் ஸமாராதனை செய்யக்கூடாது. மேலும் தீர்த்த யாத்திரை செய்தால், குல தெய்வ வழிபாடு செய்தால் இவற்றிற்கு ஸமாராதனை உண்டு. சில வீடுகளில் குலவழக்கப்படி சில சுவாமி ஸமாராதனை செய்வதுண்டு. சாஸ்தா ப்ரீதி மாதிரியான சில விஷயங்கள் உண்டு. அதுவும் ஸமாராதனை தான். பொதுவாய் நம் சமூக வழக்கம் காசி யாத்திரை போய் வந்தால் ஸமாராதனை தவிர்க்க இயலாது. ஸமாராதனை செய்தே ஆகவேண்டும். புரட்டாசி சனி ஸமாராதனை, வைதீஸ்வரன் கோவில் ஸமாராதனை இம்மாதிரியான சில விஷயங்கள்

உண்டு

**20. How frequently should Sumangali Prarthanai be done at home and what are the rules or restrictions for this?**

Sumangali Prarthanai should be done by everyone. This is not something where you can say that this is the custom in my house (or the custom in my Kula). By doing this, the women in our family (for many generations) would have longevity and would gain the blessing of being a Sumangali. This can be performed in two ways. One would be held for those Sumangalis who died in our family and is performed on the dates which are closer to their Thithi. Another one would be held during the time of Upanayanam (which is part of Poorva Karma). Other than this, Sumangali Prarthanai can be done in the house once every year. You should not remain quiet saying that it is enough if it is done in the elder brother's house. If it is a joint family, it can be done in that house. If it is a nuclear family with a separate kitchen (cooking), then it can be done separately in that house. Since some people say that it should be done in the elder brother's house, it is done in that manner. If it is vital that it should be done and if it is a joint family with a common kitchen, then it can be done. If it is a separate kitchen and a nuclear family, then Sumangali Prarthanai should also be done separately. It should be done with one's own sisters in the house. If there is a situation where they are unable to attend this function, then it should be done with (Bandhukkal) like the daughters of your father's brother or with other people. This is also a Vaitheega function like Samaaradhanai. It can be done after seeing a suitable date and as per the convenience of the people in the house. Like worshipping the Kula Deivam, doing Sumangali Prarthanai is also very important and essential.

Further if there is a situation where it cannot be done, then it need not be done. The remedy for this or if you think that this should not be missed then you can do the following – during the time of Navarathri you can keep a saree in front of the Goddess in your house and this would be sufficient. Later during the next Sumangali Prarthanai, this saree itself can be used. Rules are required in a Sumangali Prarthanai i.e. the procedures in that are very important. The answer provided above is My personal opinion.

**ஸுமங்கலி ப்ரார்த்தனை எப்பொழுதுதெல்லாம் செய்ய வேண்டும்? இதற்குண்டான விதிமுறைகள் என்ன?**

ஸுமங்கலி ப்ரார்த்தனை என்பது அனைவரும் செய்ய வேண்டும். இது ஆத்து வழக்கம் (குல வழக்கம், வீட்டு வழக்கம்) என்பதல்ல, இதை செய்வதால் பல தலைமுறைகளுக்கு பெண்களுக்கு நிறைந்த ஆயுளையும், ஸுமங்கலி ப்ராப்தியையும் தரும். இது இரண்டு விதமாக கொண்டாடலாம். ஒன்று வீட்டில் ஸுமங்கலியாக தவறி போனவர்களுக்கு வேண்டி திதியை ஒட்டி செய்வதாகும். மற்றொன்று பூர்வ கர்மாக்களில் உபநயன விவாஹ காலங்களில் செய்வதாகும். இது தவிர வீட்டில் வருடத்திற்கு ஒருமுறை ஸுமங்கலி ப்ரார்த்தனை செய்யலாம். அண்ணா வீட்டில் செய்வதால் போதும் என்று இருக்கக்கூடாது. கூட்டு குடும்பமாக இருந்தால் ஒரே வீட்டில் செய்யலாம். தனி குடும்பமாக தனி சமையலுடன் இருந்தால் தனியாக தன் வீட்டிலேயும் செய்யலாம். பெரியவர்கள் வீட்டில் தான் செய்யனும் என்று சிலர் கற்பித்ததினால் அவ்வாறு செய்யப்படுகிறது. அவசியம் என்பது கூட்டாக ஒரே வீட்டில ஒரே சமையலாக இருப்பின் செய்யலாம். தனி சமையல் தனி குடும்பம் என்று வந்த பிறகு தனியாகத்தான் ஸுமங்கலி ப்ரார்த்தனை செய்யனும்.

உடன் பிறந்த சகோதரிகளை வைத்து தான் செய்ய வேண்டும். அவர்களால் வர முடியாதபடி சூழ்நிலை இருந்தால் பந்துக்களில் அப்பா வழி சகோதரர்கள் பெண்கள் அல்லது வெளி மனுஷாளை சொல்லி இந்த ஸுமங்கலி ப்ரார்த்தனையை செய்யலாம். இதுவும் ஒரு ஸமாராதனை போல் ஒரு வைதீகமான சடங்கு ஆகும். நாள் பார்த்து வீட்டிலுள்ளவர்கள் சௌகர்யத்தை பார்த்து செய்யலாம். குல தெய்வ வழிபாடு போல் இந்த ஸுமங்கலி ப்ரார்த்தனை அவசியமானது. மேலும் செய்யமுடியாதபடி நிர்பந்தம் வருமேயானால் அப்போது செய்ய வேண்டாம். இதற்கு பரிகாரமுமாகவும், விட்டுபோகாதிருக்க வேண்டியும், நவராத்திரியில் வீட்டிலேயே அம்பாளிடம் ஒரு புடவையை எடுத்து வைத்து விட்டால் போதும். பிறகு இந்த புடவையை அடுத்து வரக்கூடிய ஸுமங்கலி ப்ரார்த்தனையில் உபயோகித்துக் கொள்ளலாம். ஸுமங்கலி ப்ரார்த்தனையில் நியதிகள் அவசியம். அதாவது அதில் உள்ள முறைகள் அவசியமானதாகும். மேற்கூறிய பதில்கள் என்னுடைய தனிப்பட்ட கருத்தேயாகும்.

## 21. What is the significance of performing Seemandham?

More than saying “Seemandham”, it is generally referred as “Pumsuvana-seemandham”. All groups, especially some Hindus celebrate the “Seemandham” function. For many, the “Valaikappu” function is celebrated. “Seemandham” is done only by few people. In the current time period, this function is celebrated based on each one’s Kula. In the Samskaras, “Pumsuvana-seemandham” is given great importance.

For the “Pumsuvana-seemandham”, the tender banyan tree leaves along with two buds is crushed using a pounding stone and a cloth is used to filter the juice. A drop of this juice is put in the right nostril of a pregnant woman and this is referred as “Pumsuvanam”. The samskara performed by a pregnant lady for begetting a male child is Pumsuvanam. Sprouts, quill of a porcupine, paddy - are of primary importance for a Seemandham.

“Seemandho-nayanam prathame garbe chathurte maasi seemandho-nayanam” – As per the Shastras, this has to be conducted in the fourth month of the first pregnancy of a woman. Seemandho-nayanam means the partitioning of a pregnant woman’s hair. The quill of a white coloured porcupine, Darbha stick and Athikai kotthu - all these should be held together and moved in an upward direction in the ‘Vagidu’ of a pregnant woman. This is referred as Seemandham.

**சீமந்தத்தின் முக்கியத்துவம் என்ன?**

சீமந்தம் என்பதை விட பும்ஸூவன சீமந்தம் என்றுதான் கூறுவது வழக்கம். அனைத்து வர்ணத்தவரும் குறிப்பாக இந்துக்கள் சிலர் சீமந்தம் கொண்டாடுகிறார்கள். பலருக்கும் வளைகாப்பு மட்டும்தான் கொண்டாடும் விதமாக உள்ளது. சீமந்தம் சிலர் மட்டும் செய்கிறார்கள். இது தற்காலத்தில் குலவழக்கமாக கொண்டாடப்படுகிறது. நம் மரபு ஸம்ஸ்காரங்களில் பும்ஸூவன சீமந்தம் முக்கியமாக உள்ளது.

பும்ஸூ வனத்திற்கு இரு காய்களுடன் கூடிய ஆலங்கொழுந்தும், அதை நசுக்க கல்லும் வடிகட்ட வஸ்திரமும். புகும்ஸூவனமஸி என்று வலது நாசியில் ஒரு சொட்டு பிழிந்து விடுவதுதான் பும்ஸூவனம். கர்ப்பிணி புருஷ ப்ரஜையை பெற வேண்டும் என்று செய்யும்

வைதீக கர்மா தான் பும்ஸுவனம். முளைவிட்டயவை, பன்றிமுள், உலர்ந்த நெல் முடிச்சு ஆகியவை சீமந்தத்திற்கு ப்ரதானமானவை.
ஸீமந்தோநயனம் ப்ரதமே கர்ப்பே சதுர்த்தே மாஸி ஸிமந்தோநயனம் முதல் கர்ப்பத்தில் நாலாவது மாதத்தில் செய்ய வேண்டும் என்பது சாஸ்திரம்.

சீமந்தோநயனம் என்றால் வகிடு பிளத்தல். வெண்ணிறம் பொருந்திய முள்ளம் பன்றியின் முள், தர்ப்பையுடன் கூடிய அதன் குச்சி, அத்திகாய் கொத்து இவற்றைச் சேர்த்துப் பிடித்துக்கொண்டு கர்ப்பிணியின் வகுட்டில் மேல்நோக்கி இழுக்கவேண்டும். இதுவே சீமந்தம்.

**22. What is significance of Shastiabdapoorthi, Bhima Shanti & Sadabhishekham?**

We have 40 Samskaras and some among them are followed as a general routine/practice. The Shantis mentioned by you are also part of these Samskaras. There are 60 Shasti Samvathsara Devathai. Those who have experienced 60 completely; those who have experienced 60 years (Upto Prabhavadi Akshaya) completely can do this Shanti; even Bhima Ratha Shanti is a Prayachitha Karma. Sadabhishekham should be done between 80 to 81 years in Uttharayanam and after seeing 1000 Chandrans. Starting the count from Garbha-vasam and completing 80 years and then keeping the 10 month period (in the Garbam) Sadabhishekham should be done within 81 years. This is as per the Shastras. Hence the three Shanthis – of 60, 70 and 80 should be done and this is considered as Dharma. Including the 10 month period (Garbha-vasam) at 81 (after seeing 1000 Moons), performing Sadabhishekham in Uttarayanam is considered best. Further everyone has Shanti Pariharam. This kind of Shanti is required / important to remove (i.e. Nivarthi) any Dosha acquired due to sins accumulated intentionally or unintentionally and/or when Anushtanams (karma) were not performed.

Further these kinds of Shanthis are also required / essential for those who have no descendants / successors and should be performed as per the prescribed procedures.

**ஷஷ்டி அப்தபூர்த்தி, பீம சாந்தி, ஸதாபிஷேகத்தின் முக்கியத்துவம் என்ன?**

நமக்கு 40 ஸம்ஸ்காரங்கள் உண்டு. அதில் ஒரு சில ஸம்ஸ்காரங்கள் வழக்கத்தில் உள்ளது. அந்த மாதிரி உள்ள ஸம்ஸ்காரங்களில் தாங்கள் குறிப்பிட்ட சாந்திகள் உண்டு. சஷ்டி ஸம்வத்ஸர தேவதைகள் 60. இந்த 60ஐ பூரணமாக அனுபவித்தவர்கள். 60 வருடமான ப்ரபவாதி அக்ஷய வரை அனைத்து வருடங்களையும் பூரணமாக அனுபவித்தவர்களுக்கு இந்த சாந்தி. பீமரத சாந்தியும் ப்ராயசித்த கர்மா தான். ஸதாபிஷேகம் ஆயிரம் சந்திரனைப் பார்த்த பிறகு 80 - 81 உத்திராயணம் தான் செய்து கொள்ள வேண்டும். கர்ப்பவாஸம் முதல் கணக்கு வைத்து 80 முடிந்து பிறகு வயிற்றில் 10 மாதம் இந்த காலத்தை கொண்டு 81க்குள் செய்து கொள்ள வேண்டும். இது தான் சாஸ்த்திரம். ஆக 3 சாந்தி 60, 70, 80 செய்து கொள்வது தான் தர்மம். கர்ப்பவாஸம் 10 மாதத்தையும் சேர்த்து 81ல் ஸதாபிஷேகம் ஆயிரம் சந்திரனை தரிசிப்பது, உத்திராயணத்தில் செய்து கொள்வதுதான் சிறப்பு. மேலும் அனைவருக்கும் இந்த சாந்தி பரிகாரம் உண்டு. ஜென்மாவில் ஏற்பட்டதான தெரிந்தோ தெரியாமலோ ஏற்பட்ட பாவங்களுக்கும் அனுஷ்டானங்களை (கர்மா) செய்யாதிருப்பதாலும் ஏற்படக்கூடிய தோஷ நிவர்த்திக்கும் இம்மாதிரியான சாந்திகள் அவசியமாகும்.

மேலும் இம்மாதிரியான சாந்திகள் சந்ததிகள் இல்லாதவர்களும் அதற்குண்டான முறைப்படி பண்ணிக்கொள்ள வேண்டியது அவசியமாகும். இம்மாதிரியான உயர்ந்த கேள்விகள் பயனுள்ளது தான். இன்னும் விவரமாக தெரிவிக்க இன்னொரு சமயம் சம்பவிக்கட்டும்.

**23. During Aavani Avittam, most of us go to the temple for changing our sacred thread. The mantras chanted by the priest are sometimes not clearly audible or it is uttered fast and hence we may not be able to pronounce it correctly. Will any Dosha be acquired due to this?**

Aavani Avittam is followed by many groups in the Hindu religion. Further any mantra has to be chanted by a Guru with sincerity and involvement. The Guru should chant it in such a way that his disciples pronounce the syllables correctly and clearly (i.e. with Akshara Shuddham). Further as there is shortage (unavailability) of priests during Aavani Avittam time and as they need to visit several

houses during that time, they are unable to perform the Aavani Avittam ritual in a patient manner. Even for us, learning such mantras frequently would be favorable or advantageous to us. There are two aspects here i.e.whether the person is rich or poor this should be followed together with everyone in the Brahmin community either in a temple or by the river side.

When it is done at home there is no benefit for that. When it is done along with a group and when the priest is in one place, he can also patiently chant the mantra with involvement for everyone to listen and follow that. Hence more than not chanting the mantra properly, when the mantra is not taught slowly and steadily (and with clarity), the related Dosha would be acquired by the priest. He (i.e. the priest) would acquire the Dosha. In the present time period, when we lead a life adjusting to many things, this sort of inconvenience or difficulty is due to the reason which has been explained above.

**ஆவணி அவிட்டத்தின் போது பலரும் கோவிலுக்கு சென்று பூணல் மாற்றுவோம். அச்சமயம் அங்கு வாத்தியார் உச்சரிக்கும் மந்திரங்கள் தெளிவாக கேட்காமலும் அல்லது வேகமாக உச்சரிப்பதால் நாம் உச்சரிக்கும் போது தவறுவர வாய்ப்பு உண்டு. இதனால் ஏதேனும் தோஷம் வருமா?**

**ஆவணி அவிட்டம் என்பது நம் இந்து மதத்தில் பல பிரிவினர் அனுஷ்டிக்கிறார்கள். மேலும் எந்த ஒரு மந்த்ரமும் குரு ஸ்ரத்தையோடு சொல்ல வேண்டும். சிஷ்யர்கள் அதை அக்ஷர சுத்தமாக சொல்லும்படி சொல்ல வேண்டும். மேலும் ஆவணி அவிட்ட காலங்களில் செய்து வைக்கிற வாத்யார் பற்றாக் குறையால் பல இடங்களுக்கும் போக வேண்டியுள்ளதால் அவர்களால் பொறுமையாக செய்து வைக்க முடியாது. நாமும் அடிக்கடி இம்மாதிரி மந்தரார்த்தங்களை தெரிந்து வைத்துக் கொள்வது நமக்கு அனுகூலமே. வருடத்திற்கு ஒரு முறை கடைபிடிக்கக் கூடிய இந்த ச்ராவணம் பலதையும் உத்தேசிக்க வேண்டியுள்ளது. இதில் இரண்டு விஷயம் - அதாவது பணக்காரரோ, ஏழையோ ப்ராம்மண சமூகம் அனைவருடனும் சேர்ந்து கோவிலிலோ நதிதீரத்திலோ அனுஷ்டிக்க வேண்டும். வீட்டிலேயே போட்டு கொள்வதால் பலன் இல்லை. மேலும் கூட்டு வழிபாடு மூலம் செய்து கொள்வது வாதியார் ஒரே இடத்தில் இருந்து ச்ரத்தையுடன் ச்ராவணம் செய்து வைக்க முடியும். மேலும் வீட்டிற்கு ஒருவர்**

அத்யாயனம் செய்வதால் இம்மாதிரியான காலங்களில் பரோபகாரம் செய்ய முடியும். ஆகவே மந்திரங்களை சரியாக சொல்லாததை விட சரியாக நிறுத்தி நிதானமாக சொல்லிக் கொடுக்காத உபாத்யாயருக்கு இது சம்மந்தமான தோஷம் போகும். அவருக்கு தான் தோஷம். ஆகவே நாம் இக்காலகட்டத்தில் பலதையும் அனுசரித்து வாழ்வதால், இம்மாதிரி ச்ராவண காலத்தில் ஏற்படக் கூடிய சங்கடங்களுக்கு மேலே குறிப்பிட்ட விஷயம் தான் காரணம்.

**24. Why do Iyers and Iyengars celebrate Deepavali, Krishna Jayanthi & many other festivals on different dates?**

Deepavali, Krishna Jayanthi and other festivals - every festival is celebrated for an occasion, whether it is the Avatar day of God or His Nakshatra or for celebrating certain historical events. For Deepavali we have the story of Narakasura and for Krishna Jeyanthi it is the birth date of Lord Krishna. We also have the Avatar day of Lord Muruga, the Avatar day of Lord Narasimha, etc. and even Thiruvathirai is Lord Shiva's Janma Nakshatra. Generally Avatar means 'Descent'. There are differences among humans when it comes to Saivam and Vaishnavam. But there are no differences among Gods (Swami's). There is only one God. The forms and actions may be different and the reason for this may be the purpose of action. Bhagawan Krishna was a Guru and a God. Even Ambal is called as 'Dakshinamoorthy Roopini'. The name and form are different and the task/action is also different, but the Vastu inside them is the same. In the Grantham 'Prashnotara Rathna Malika' by Adi Sankara, He has said that 'Sankara Narayana Atma Ekaha" – in the Sankalpam first it is said that it is done for the Priiti (i.e. to please/satisfy) of Lord Shiva and later it is concluded as 'Krishnaarpanam Janarthana Priyathaam'. How can we begin by saying that this is to please/satisfy one person and finish the same by saying that this is to please/satisfy another person – but since both are one and the same, this is possible!

**ஐயர் மற்றும் ஐயங்கார் தீபாவளி, கிருஷ்ண ஜெயந்தி மற்றும் பல பண்டிகைகள் வெவ்வேறு நாட்களில் கொண்டாட காரணம் என்ன?**

ஒவ்வொரு பண்டிகைகளும் பகவானின் அவதாரதினமோ, நக்ஷத்திரமோ அல்லது சில சரித்திர ரீதியான நிகழ்வுகளோ

தான் தீபாவளி, கிருஷ்ண ஜெயந்தி மற்றுமுள்ள பண்டிகைகள். தீபாவளிக்கு நரகாஸுரன் கதை. கிருஷ்ண ஜெயந்தி பகவான் கிருஷ்ணனின் பிறந்த நாள். முருகனின் அவதார தினமும், நரசிம்ம அவதார தினம், திருவாதிரை கூட சிவனுடைய ஜென்ம நக்ஷத்திர தினம். பொதுவாய் அவதாரம் என்பது இறங்குதல் எனப் பொருள். வைணவம் சைவம் என்பதில் மனுஷ்ஷாளுக்கு பேதம் இருக்கிறது. ஆனால் ஸ்வாமிகளுக்குள் பேதம் இல்லை. கடவுள் ஒருவரே, உருவங்கள் செயல்கள் வேறுபடும். காரிய காரணம் தான் காரணம். பகவான் கிருஷ்ணன் குருவாகவும் கடவுளாகவும் இருந்தார். அம்பாளைகூட தக்ஷிணாமூர்த்தி ரூபிணி என்று கூறுவதுண்டு, பெயர் வேறு, உருவம் வேறு, வேலை வேறு ஆனால் உள்ளேயிருக்கப்பட்ட வஸ்து ஒன்றே தான். ஆதிசங்கர ப்ரச்னோத்ர ரத்னமாலிகா என்ற க்ரந்தத்தில் 'சங்கர நாராயண ஆத்மா ஏகஹ' முதலில் பரமேஸ்வர ப்ரீதிக்காக என்று சங்கல்பம் முடிவில் 'கிருஷ்ணார்ப்பணம் ஜனார்த்தன ப்ரீயதாம்' என்று முடிக்கிறோம். ஒருத்தன் ப்ரீதிக்கு என்று ஆரம்பித்து இன்னொருத்தன் ப்ரீதிக்கு என்று எப்படி முடிக்க முடியும், இரண்டும் ஒன்றாகவே இருப்பதால் தான் முடிகிறது.

**25. In the recent years many people have started buying jewellery on Akshaya Thrithi day as they consider this to be an auspicious day, while some others feel that charity should be done on this day. What is the right thing to do on this day?**

Akshaya Thrithi is a day when one would acquire Punya (merit). Since it is the day on which Adi Shankarar sang the Kanakadhara Sthothram, buying gold on this day is auspicious. For obtaining the grace of Goddess Lakshmi and since wealth would increase, many people buy gold on this day as a routine practice. Our Shastras tell us that more than gaining significant Punya by doing charity on this day, we would attain a state where there would be no rebirth. Doing charity and attaining benefits on this day is considered noble and the best.

**சமீபகாலமாக அக்ஷய த்ருதி அன்று தங்கம் வாங்குவது சிறப்பு என்கிறார்கள். மேலும் சிலர் இந்த தினத்தன்று நல்ல கார்யத்திற்கு நன்கொடை வழங்கினால் சிறப்பு என்கிறார்கள். இந்த நாளில் என்ன செய்ய வேண்டும்?**

அக்ஷய த்ருதியை புண்ய நாள் ஆகும். ஆதிசங்கரர் கனகதார ஸ்தவம் பாடிய நாள் என்பதால் அன்று தங்கத்தை வாங்குவது விசேஷம் தான். மகாலக்ஷ்மி அருள் கிடைக்க வேண்டும் என்பதாலும் ஐஸ்வர்யம் பெருகும் என்பதால் அனைவரும் தங்கம் வாங்குவதை வழக்கமாகக் கொண்டுள்ளார்கள். ஆனால் நமது சாஸ்த்திரம் கூறுவது அன்றைய தினம் செய்யும் தான தர்மங்களுக்கு அதிக புண்யம் உண்டு என்பதை விட பிறவியில்லா பெரு வாழ்வை அடைய முடியும். தான தர்மங்களை செய்து பலன் பெறுவது உத்தமம்.

## VI. Pitrus & Srardham / பித்ருகள் மற்றும் ஸ்ரார்த்தம்

**26. Some people say that if Tharpanam / Srardham is done regularly, there is no need to go to Kasi for doing Pitru karyam. Is this correct?**

Kasi Yatra is essential (mandatory) and is considered as Dharma. Tharpanam and Srardham is very important for Hindus. Further when Kasi Yatra is done, the forefathers get satisfied. When Tharpanam and Srardham is done, there is greater benefit and greater satisfaction and this is also very essential. Going to Kasi and Gaya and performing the rituals there is part of our custom. Only those who do Pitru Karyam properly (as per the prescribed procedure) on a continuous basis, will be able to perform the rituals in the Yatra and can obtain the benefits. Even after returning from Kasi Yatra, one has to definitely perform Tharpanam and Srardham on a regular basis. Without providing any excuse (reason) for performing our Karma, one has to compulsorily follow this and this is our Dharma. If one understands the prescribed procedure to be followed during Kasi Yatra and then adheres the same, immense benefits can be attained.

சிலர் தர்ப்பணம் மற்றும் ஸ்ரார்த்தம் தொடர்ந்து செய்பவர்கள் காசிக்கு சென்று பித்ரு கார்யம் செய்ய வேண்டாம் என்கிறார்கள். இந்த கருத்து சரியா?

காசி யாத்திரை அவசியமானது, தர்மமானது. தர்ப்பணம், ஸ்ரார்த்தம் இந்துக்களுக்கு மிக மிக முக்கியமானது ஆகும். மேலும் காசி யாத்திரை செய்வதால் பித்ருக்களுக்கு த்ருப்தி.

தர்ப்பணம் ஸ்ரார்த்தம் செய்வதால் அதிக பலன் அதிக த்ருப்தி. அவசியமானது. காசி, கயா சென்று கார்யம் செய்வது வழக்கம். பித்ரு கார்யம் முறையாக தொடர்ந்து செய்து வருபவர்கள் தான் மேற்படி யாத்திரையில் பித்ரு கார்யம் செய்ய பலன் அடையலாம். போய் வந்த பிறகும் தொடர்ந்து தர்ப்பணம் ஸ்ரார்த்தம் போன்றவை செய்தே ஆக வேண்டும். கர்மா செய்வதற்கு சமாதானம் கூறாமல் அவசியம் செய்வது நம் தர்மம். காசி யாத்திரை முறைகளை தெரிந்து அனுஷ்டித்தால் அபரிமித பலன் உண்டு.

**27. What should we do when a relative on the father's side passes away (same gothram)? Can we do pooja in the house or visit the temples?**

In general for every group or for what you can call as every sect of 'Brahmins' (Andanar) alone, certain rules have been defined. The detail of what is followed as per one's Kula or as per the culture is taken from the Dharma Shastras only. There are two things which need to be followed from the Dharma - 'Poorvam' and 'Abharam'. Samskaram, Auspicious events, Poojas, Homams, Upanayanam, etc. come under 'Poorvam' and Srardham (or Thithi) which is a Karma done for people who have departed is referred as 'Abharam'.

Further there are Samskaras under 'Abharam' (for certain relatives in the father's side). Out of these, there are certain things 'Karyam' (you can also call this as 'Sadangu') which needs to be followed. Not for 13 days or 45 days, but Samvatsaram (yearly) i.e. there are actions which are required to be followed for 1 year. Only after completion of the yearly Thithi or 'Aabdeegam', one should visit the temple.

Visiting other temples or climbing hill temples should be avoided. One should not go to any temple. Further only after seeing the Kula Deivam should you visit all other temples i.e. after one year. This is mentioned in many books (i.e. excerpts from the Dharma Shastra book) and has been shown as a path by our ancestors. Rather than other people telling things, following what has been mentioned in our sect by our ancestors will remove all/any kind of confusion in this regard.

**அப்பா வம்சம் உறவினர்கள் தவறிவிட்டால் (ஒரே கோத்திரம்)**

வீட்டில் பூஜை செய்யலாமா? மற்றும் கோவிலுக்கு செல்லலாமா?

பொதுவாகவே ஒவ்வொரு வகுப்பினர்களும் அதாவது பிரிவு என்று சொல்வதில் ப்ராம்மணர்களுக்கு (அந்தணர்களுக்கு) என்ற வகுப்பினர்களுக்கு மட்டும் சில நியமங்கள் விதிக்கப்பட்டிருக்கிறது. குல வழக்கம் என்றும் கலாச்சாரம் என்றும் சொல்லும் சில விவரங்கள் கூட தர்ம சாஸ்த்திர வழிகாட்டியின் மூலமாகத்தான் அனுஷ்டிக்கப்படுகிறது, அனுஷ்டிக்கப்பட வேண்டிய சில தர்மங்களில் இரண்டு வித வழிமுறைகள் அதாவது பூர்வம், அபரம் என்று உள்ளது. ஸம்ஸ்காரம் நல்ல கார்யங்களான பூஜை ஹோமம் மற்றும் உபநயணம் போன்ற பல விஷயங்கள் பூர்வம். ஸ்ரார்த்தம் (திதி) இறந்து போனவர்களுக்கு செய்யப்படும் கர்மா இவற்றிற்கு அபரம் என்று பெயர்.

மேலும் அபர கார்யமான (தகப்பனார் வழியாக இருக்கும் சில உறவுகளுக்கு) செய்யப்படும் ஸம்ஸ்காரம் உண்டு. அதில் கடைபிடிக்க வேண்டிய கார்யம் (சடங்கு என்பது கூட சொல்லலாம்) சில உண்டு. 13 நாட்கள் 45 நாட்கள் என்று இல்லாமல் சம்வத்ஸரம் என்று ஒரு வருடமாக செய்யப்படும் கார்யங்கள் உண்டு. ஆப்தீகமாக கருதபடும் வருட திதியை முடித்துக் கொண்டு தான் எல்லா ஆலயங்களுக்கும் செல்ல வேண்டும்.

மலை ஏறுதல் மற்ற ஆலயங்கள் செல்லுதல் தவிர்க்க வேண்டும். எந்த கோவிலுக்கும் செல்ல கூடாது. மேலும் குல தெய்வத்தை தரிசனம் செய்துவிட்டுத்தான் அனைத்து ஆலயங்களுக்கும் செல்ல வேண்டும். ஒருவருட திதியை முடித்து விட்டு செல்ல வேண்டும் என்பது தொன்றுதொட்டு நூல் வழியாக (தர்ம சாஸ்த்திர சுருக்கம் என்று புத்தகம்) மற்றும் நம் முன்னோர்கள் அனுஷ்டித்த மார்கம் மூலமாகவும் அனுஷ்டானத்தில் விதிக்கப்பட்டுள்ளது. மற்றவர்கள் சொல்வதை விட நம் பிரிவினருக்கு நம் முன்னோர்கள் சொல்வதை, சொன்னதை அனுசரித்தால் குழப்பத்திற்கு வழியில்லாததான தெளிவு கிடைக்கும்.

**28. How can Srardham be performed for a person's father or mother when there is no son (but only a daughter)? Also what would be the status of these departed souls, as there is no son who would be performing the Pitru karyam for them on a regular**

**basis?**

When there is no son for performing the Pitru karyam, anyone can take the ‘Kai Pul’ (i.e. Darbai) from the daughter and the “Sankalpa Srardham” can be performed wherein Vastram & Bhojanam can be given to the Brahmanas. If it is the same Gothra it is ok and even if it is not the same Gothra, it is ok, as long as the initiation (action) is taken from the daughter. Doing it in such a manner is considered the best. Anyone can perform this, i.e. as a “Karma-athikari”. Definitely Atma Shanthi would be obtained by the ancestors.

In the Vaideega Samskara for these kind of things, since the Karma is very important, anyone can perform this. The complete benefit would go to the daughter and to the person who took the initiation from the daughter to perform the Pitru karyam. There is no necessity to do Srardham Homam and Sankalpa Srardham itself is considered the best.

**பொதுவாக அம்மா அப்பாவிற்கு ஸ்ரார்த்தம் மகன் இருந்தால் செய்கிறார்கள். ஆனால் ஆண் வாரிசு இல்லாதவர்களுக்கு மகள் ஸ்ரார்த்தம் செய்யலாமா? அவர்கள் ஆத்மா சாந்தி அடைய என்ன செய்யலாம்? மேலும் மகன் இல்லாத காரணத்தால் பித்ரு கார்யத்தை தவறாமல் செய்வது எப்படி?**

பித்ரு கார்யம் செய்ய ஆண் வாரிசு இல்லாத போது யார் வேண்டுமானாலும் கைப்புல் அதாவது பெண்ணிடம் புல் (தர்பை) வாங்கி சங்கல்ப்ப ஸ்ரார்த்தமாக ப்ராம்மணாளுக்கு வஸ்த்ரம் போஜனம் செய்விக்கலாம். ஒரே கோத்திரமாயிருந்தால் சரி அல்லது எந்த கோத்திரமானாலும் சரி உங்களிடம் (பெண்ணிடம்) பொறுப்பை வாங்கிக் கொண்டு செய்வது தான் சிறப்பு. கர்மாதிகாரியாக யார் வேண்டுமானாலும் செய்யலாம். கண்டிப்பாய் பித்ருக்களின் ஆத்மா சாந்தி அடையும்.

வைதீக ஸம்ஸ்காரங்களில் இம்மாதிரி உண்டான விஷயங்களுக்கு கர்மா முக்கியமானதால் யார் வேண்டுமானாலும் இதை எடுத்து செய்யலாம். முழுபலனும் எஜமானி ஆன பெண்ணுக்கும் இந்த பித்ரு கார்யத்தை பொறுப்பேற்று செய்தவருக்கும் கிடைக்கும். ஸ்ரார்த்தம்

ஹோமம் செய்ய வேண்டும் என்கிற அவசியமில்லை. சங்கல்ப்ப ஸ்ரார்த்தமே சிறந்ததாகும்.

**29. When should we take bath in the sea? Is it during Ammavasai (before or after Tarpanam) or Pournami?**

If you live near the sea, then you can do Snanam on a daily basis. Otherwise atleast once a month you should Snanam in the sea. Doing Snanam twice on Ammavasai day, before Tarpanam and after Tarpanam is considered superior. Else doing Snanam after Tarpanam is also considered superior. Even on Pournami day, doing Snanam is considered ideal and best. Since all the rivers join in the sea, sea is considered superior and praiseworthy. Hence doing Snanam in the sea would give us immense benefits. Any Thithi is good and appropriate.

**ஸமுத்ர ஸ்நானம் அமாவாசை தினத்தில் (தர்ப்பணத்திற்கு முன்பு அல்லது பின்பு) அல்லது பௌர்ணமி தினத்தன்று எப்பொழுது செய்ய வேண்டும்?**

ஸமுத்ரவாஸியாயிருப்பின் தினமும் ஸ்நானம் செய்யலாம். மாதம் ஒரு முறையாவது ஸமுத்ர ஸ்நானம் செய்ய வேண்டும். அமாவாசை தினத்தன்று தர்ப்பணம் ஆரம்பிக்கும் முன் தர்ப்பணம் முடிந்த பின் இரு வேளையும் செய்வது சிறப்பு. அல்லது தர்ப்பணத்திற்கு பின் செய்தால் சிறப்பு. பௌர்ணமி அன்றும் ஸ்நானம் செய்வது உத்தமம். ஸமுத்ரம் இடத்தில் அனேக நதிகள் சங்கமிப்பதால் ஸமுத்ரம் போற்றுதலுக்குரியதாகும். ஆகவே ஸ்நானம் செய்வது புண்ணியத்தை பலமடங்கு நமக்கு கொடுக்கும். எந்த திதியும் உகந்தது தான்.

**30. Can we give Vazhakai and Arisi during Ammavasai to Vadyar?**

Giving Vazhakai and Arisi during Ammavasai is a highly meritorious deed. Benefits are immense for this. It is considered as Preethi for Pitru Devathas, Vamsa Pitru and for Pitru Gothra Vamsa. Certainly this should be done. Definitely do this and gain the benefits. Instead of only on Ammavasai day, if you have the affordability give Vazhakai and Arisi on all those days when Tharpanam is done and gain the benefit.

**அமாவாசை அன்று வாத்தியாருக்கு வாழைக்காய் அரிசி கொடுக்கலாமா?**

அமாவாசையன்று வாழைக்காய், அரிசி கொடுப்பது மிக மிக புண்யம். பலன் அதிகம் உண்டு. பித்ரு தேவதைகளுக்கு ப்ரிதி, வம்ஸ பித்ருக்களுக்கு, பித்ரு கோத்திர வம்ஸத்திற்கு ப்ரிதி. இதை அவசியம் செய்யனும். கண்டிப்பாய் செய்து பலன் பெறுங்கள். அமாவாசை என்று இல்லாமல் நமக்கு வசதி இருப்பின் தர்ப்பண காலங்களிலெல்லாம் கொடுத்து புண்யத்தை அடையலாமே.

## VII. Sandhya Vandanam / ஸந்த்யா வந்தனம்

**31. Sometimes when we go out of station for work or if we are travelling by train/bus/flight, we might not be able to do Sandhya Vandanam. How can this be handled?**

Sandhya Vandanam which is a very significant/great karma should be performed only when you are in physical contact with the Earth. When you are flying in the sky or when you are travelling by train or when you travelling by bus or any other mode of transport, definitely you should not perform Sandhya Vandanam. The remedy for this is – in the Sannidhi of Goddess Ambal light 2 Ghee lamps (Nei Deepam) and do 36 Pradakshinams either before 6 a.m. or before 1 p.m. or before 6 p.m. (i.e. out of these three timings, during any one of the timings). In general if one has not performed Sandhya Vandanam for a long time due to certain reasons or situations - on the (Tamil) date on which Upanayanam was conducted offer a Vastram (Cotton Saree) to the Goddess (in the temple) and perform Neivedhyam with 3 fruits and curd rice. By doing this, the sin acquired out of not having performed Sandhya Vandanam for a long time will be removed. Visiting the Kula Deivam every year is a must and is also very important. The Dosha arising out of our Karma (i.e. when the karma is not performed) will definitely be removed.

**சில சமயங்களில் வேலை காரணமாக வெளியூர் செல்ல வேண்டி இருப்பதால் பேருந்து, விமானம், ரயில் போன்றவற்றில் செல்ல இருப்பதால் ஸந்தியா வந்தனம் செய்ய முடியாமல் போகிறது. இது போன்ற சமயங்களில் என்ன செய்ய வேண்டும்?**

ஸந்தியா வந்தனம் என்ற மகத்தான இந்த கர்மா பூ ஸ்பர்ஸத்துடன் தான் பண்ண வேண்டும். வானத்தில் பறக்கும் போது ரயிலில் செல்லும் போது பேருந்தில் மற்றும் இதர வாகனங்களில் பயணம் செல்லும் போது கண்டிப்பாக பண்ண வேண்டாம். அதற்கு ப்ராயசித்தம் அம்பாளின் ஸன்னிதியில் காலை 6 மணிக்குள்ளாகவோ மதியம் 1 மணிக்குள்ளாகவும் மற்றும் மாலை 6 மணிக்குள்ளாகவோ இந்த மூன்று வேளையில் ஏதாவது ஒரு வேளையில் இரண்டு நெய் தீபம் ஏற்றி வைத்து விட்டு 36 ப்ரதக்ஷிணம் செய்யவும். பொதுவாய் பல நாட்கள் ஸந்தர்ப்ப சூழ்நிலையின் காரணமாக செய்யாமல் போனால் 1 வருடத்திற்கு ஒரு முறை உபநயனம் ஆன நாள் அதாவது தமிழ் மாதத்தில் எந்த தேதியில் நடந்ததோ அந்த நாளில் அம்மன் கோவிலில் அம்பாளுக்கு புடவை (நூல் புடவை) சாற்றி 3 கனிகள் மற்றும் தயிர் சாதம் நிவேதனம் செய்யவும். இதனால் பல நாட்கள் செய்யாத ஸந்த்யா வந்தனத்திற்குண்டான பாபம் தொலைந்துவிடும். குல தெய்வ வழிபாடு ப்ரதி வருடம் அவசியமாகும். நம் கர்மாவினால் ஏற்படும் தோக்ஷம் (அதாவது கர்மா செய்யாததால் ஏற்படுவது) கண்டிப்பாய் விலகியே தீரும்.

**32. To whom all can we say Abhivaadaye and to whom all should we never say Abhivadaye to? Also if the person is just a few years elder can I say Abhivaadaye to them?**

Generally Abhivadaye is a Sampradayam which is part of our Karma. This is also a part of our Samskara. This can be told only to one's mother (among all other women) on the day of Upanayanam i.e. the day on which the sacred thread is worn. It can also be told to men who are elder than you, provided you are wearing the Poonal and you have been doing Sandhya Vandanam. Only if you have been following this can you tell the Abhivadaye to other men. Even if they are just one year older, they should be among those people who have been adhering to this Karma.

Further the eligibility for saying Abhivadaye is doing Sandhya Vandanam regularly without fail. More than saying Abhivadaye properly, it should be said with clarity and with the right pronunciation i.e. 'Akshara Shuddham' and should be uttered in a steady pace. Those who have the qualities mentioned above, should first do Namaskaram and then get up and say the Abhivadaye and then do Namaskaram again.

அபிவாதயே யாரிடம் சொல்லலாம், யாரிடம் சொல்லக்கூடாது? சிறு வயது கூட இருந்தாலும் அபிவாதயே சொல்லலாமா?

பொதுவாக அபிவாதயே என்பதான இந்த சடங்கு (ஸம்ப்ரதாயம்) கர்மாவில் உள்ளது, ஸம்ஸ்காரத்தில் இதுவும் ஒரு அங்கமாகயுள்ளது. இதை உபநயனத்தன்று (பூணல் போட்டுக்கொள்ளும் அன்று) தாயாருக்கு மட்டும் ஸ்திரீகளில் இந்த அபிவாதயே சொல்லலாம். மற்றும் ஆண்களுக்கு வயதில் பெரியவர்களாகயிருந்தால் பூணல் போட்டுக் கொண்டு ஸந்த்யா வந்தனம் செய்பவர்களாகயிருந்தால் மட்டுமே அவர்களுக்கு அபிவாதனம் செய்யலாம். ஒரு வயது கூட இருந்தாலும் கர்மாவை அனுஷ்டிப்பவர்களாக இருக்க வேண்டும்.

மேலும் அபிவாதயே சொல்ல தகுதி ஸந்த்யா வந்தனத்தை விடாது கடைபிடித்தால் இதையும் கடைபிடிக்கலாம். அபிவாதயே சரியாக சொல்வதை விட அக்ஷர சுத்தமாக நிதானமாக கூற வேண்டும். மேற்கூறிய பண்புகளுடன் உள்ளவர்களுக்கு முதலில் நமஸ்காரம் செய்து எழுந்து அபிவாதயே சொல்லிவிட்டு பிறகு நமஸ்காரம் செய்யனும்.

**33. Why is Aachamanam done?**

Aachamanam in necessary for gaining Atma Shuddhi. At the beginning of every task and after completion (for the purpose of attaining Antahkarana Shuddhi & Atma Shuddhi) and before performing all karmas in the future, we should chant the three Namas of ‘Achyudhan’, ‘Anandhan’ and ‘Govindhan’ and swallow one spoon (Udharini) of water. By doing this, our heart, speech (words) and physical body will become pure. Further there are 42 karmas – to obtain the eligibility for all kinds of Purva Abhara Karmas, first Aachamanam should be done with these three Namas (names). When any Dosha (Anacharam or impurity) is acquired during any of the Vaidheega activities, doing Aachamanam immediately is considered the best. Before talking and after talking, before and after food, definitely Aachamanam should be done. For each and every activity (whether it is for God or for the Ancestors) and whenever you get time (without seeing the actual time) Aachamanam can be done. For obtaining purity, the holy Aachamanam (mantra) should be chanted / performed.

ஆசமனம் ஏன் செய்ய வேண்டும்?

ஆசமனம் செய்வது ஆத்மஸௌத்திக்கு அவசியமானது. ஒவ்வொரு கார்யத்திற்கு முன்னும், ஒரு கார்யம் செய்த பின்னும் அந்தக்கரண ஸௌத்திக்காகவும் ஆத்மபரிசுத்த கார்யத்திற்காகவும், மேற்கொண்டு நாம் செய்யக் கூடிய ஸகல கர்மாக்களுக்கும் முன்னதாக அச்சுதன், ஆனந்தன், கோவிந்தன் என்ற மூன்று நாமங்களை கூறி தண்ணீர் ஒரு உத்திரணி உட்கொள்வதால் மனது, வாக்கு, சரீரம் பவித்ரமாகும். மேலும் கர்மாக்கள் 42 உண்டு - ஸகலவிதமான பூர்வ அபர கர்மாக்களுக்கான யோக்யதையை பெற வேண்டுமானால் முதலில் இந்த நாமா மூலம் ஆசமனம் செய்ய வேண்டும். அனைத்து வைதீக கார்யங்களுக்கும் தோஷம் ஏற்படும் போதும் அனாசாரம் (அஸௌத்தம்) ஏற்படும் போதும் உடனடியாக ஆசமனம் செய்வது ச்லாக்யமாகும். பேசுவதற்கு முன் பேசி முடிந்த பின்னும், ஆகாரத்திற்கு முன்னும் பின்னும் ஆசமனம் அவசியம் பண்ணனும். ஸதா ஒவ்வொரு தெய்வ கார்யத்திற்கும், பித்ரு கார்யத்திற்கும் எப்போதெல்லாம் நேரம் கிடைக்கிறதோ கால நேரமின்றி ஆசமனம் செய்யலாம். பரிஸௌத்தமான ஆசமன மந்த்ரத்தை பரிஸௌத்தத்திற்கு வேண்டி செய்ய வேண்டும்.

**34. In Madhyaahnikam (afternoon) Sandhya Vandanam, why is Gayathri Japam chanted only 64 times and not 108 times?**

Whenever Sandhya Vandanam has to be performed (and at various points of time during the day), the Gayathri mantra should be chanted 108 times and this is considered the best. 64 or 32 times is something which we have ourselves followed as a practice/routine. Benefits are manifold when it is chanted 108 times. When it is chanted less number of times, the benefits would also be less. Chanting the Gayathri mantra 108 times is also as per the Shastra and is considered the best.

**ஸந்த்யா வந்தனம் மதியம் செய்யும் போது ஏன் காயத்ரி ஜபம் 64 முறை தான் செய்கிறோம்? 108 முறை செய்யாதது ஏன்?**

ஸந்த்யா வந்தனம் காலங்களில் ஒவ்வொரு வேளையும் 108 முறை காயத்ரீ மந்த்ரம் ஜபிப்பது உத்தமம். 64, 32 என்பது

நாமாக வைத்துக் கொண்ட வழக்கமே. 108 சொல்வதால் பலன் அதிகப்படியாக உண்டு. காலமறிந்து குறைத்து செய்வதால் பலன் குறைவாகவே கிட்டும். 108 முறை ஜபிப்பது சாஸ்த்திரமும் கூட, 108 முறை ஜபிப்பது உத்தமம்.

**35. Sanyasis do not observe the Gayathri mantra japam. Is there any reason for this?**

'Yagnopaveetham' which refers to the 'Poonal' (which is the sacred thread) is mandated for those in Varna-shramam. Poonal is also mandated for all those beginning from Brahmacharya-shramam to Grihashta-shramam. Gayathri mantra is applicable for all, except Sanyasis. Poonal is not required for Sanyasis. As Sanyasis are more focused on Self-Realization (rather than what is happening in the world), Poonal or the Gayathri mantra is not required. What has been explained above is my personal opinion.

**ஸன்யாஸிகளுக்கு காயத்ரி மந்த்ர ஜபம் உண்டா? இல்லை என்றால் இதற்கு காரணம் என்ன?**

யக்ஞோபவீதம் என்ற பூணல் வர்ணாஸ்ரம தர்மத்திற்கு அவசியமானது. ப்ரம்மசர்ய ஆஸ்ரமத்தில் ஆரம்பித்து க்ருஹஸ்தாஸ்ரமம் போன்ற வர்ணத்தவர்களுக்கு பூணல் அவசியம். காயத்ரி மந்திரம் ஸன்யாஸிகளைத் தவிர அனைவருக்கும் உண்டு. பூணல் ஸன்யாஸிகளுக்கு கிடையாது. அவர்கள் 'ஊனினை சுருக்கி உள்ளொளி பெருக்கி' என்ற அடிப்படையில் இருப்பதால் மந்தரங்கள் அவசியமில்லை. மேலும் ஸன்யாஸி என்று வந்துவிட்டால் லோக விசாரமின்றி ஆத்ம விசாரத்தில் ஈடுபட்டிருப்பதால் பூணலோ அதை சார்ந்த காயத்ரி ஜபமோ கிடையாது. எனக்குத் தெரிந்த கருத்தை தெரிவித்துள்ளேன்.

**36. What do the Vedas say about Sandhya Vandanam, if one (Brahmin) does not follow this?**

One who does not do his Sandhya Vandanam is not a Brahmin. As per the Varnashrama Dharma we have the "Brahmin". Further the Veda chanted by a person, who does not do his Sandhya Vandanam will not have any effect. For chanting Vedas, Gayathri (the Mother of Vedas) and Sandhya Vandanam is most important and critical. If one does not do his Sandhya Vandanam, he is not the only one who is

responsible for that, but it is also his father and the other elders in the house who are responsible. These people should perform the Sandhya Vandanam and serve as an example. Finding fault in others is also Adharma. Doing Sandhya Vandanam bestows prosperity for us and our future generations. It also serves as a way of pleasing God. For chanting Vedas or regarding its consequence, the father who put the "Poonal" for the son or the Guru who initiated it, should advise and make the person perform his Sandhya Vandanam.

**வேதத்தின் அடிப்படையில் ஸந்த்யா வந்தனம் செய்யாமல் இருந்தால் (முக்கியமாக ப்ராம்மணர்கள்) என்னவாகும்?**

ஸந்த்யா வந்தனத்தை செய்யாதவன் ப்ராம்மணன் அல்ல. வர்ணாஷ்ரமத்தை கொண்டுதான் ப்ராம்மணன். மேலும் ஸந்த்யா வந்தனம் செய்யாதவன் சொல்லும் வேதம் பலிக்காது. வேதம் சொல்வதற்கு உத்தமமான வேத மாதாவாகிய காயத்திரியும் அதன் அங்கமான ஸந்த்யா வந்தனமும் அவசியமே. ஸந்த்யா வந்தனம் செய்யாதவன் கர்மா நஷ்டமே. ஸந்த்யா வந்தனம் ஒருவன் செய்யவில்லை என்றால் அவன் மட்டுமே காரணம் அல்ல. தகப்பனார் மற்றும் வீட்டில் உள்ள பெரியவர்கள் இவர்கள் வழிகாட்டும் விதமாக ஸந்த்யா வந்தனம் செய்ய வேண்டும்.

நாம் மற்றவர்களுடைய குறையை பார்ப்பதுகூட அதர்மமே. நாம் ஸந்த்யா வந்தனம் பண்ணுவது நமக்கும் நம் சந்ததிகளுக்கும் ச்ரேயஸ்தான். பகவத் ப்ரீதிகரமாகவும் அமைகிறது. வேதம் சொல்வது இருக்கட்டும் விளைவுகள் இருக்கட்டும் பூணல் போட்டு வைக்கும் தகப்னாரும் அவருக்கு குருவாகப்பட்ட உபாத்யாயரும் இதை எடுத்துக்கூறி பண்ணும்படியாக செய்ய வேண்டும்.

## VIII. Poojas & Homams / பூஜைகள் மற்றும் ஹோமங்கள்

37.I have read somewhere that Mahaperiva advocated that it is okay to have more than one Guru but Guru Padhuka Pooja should be done for only one of them and we must not do Padhuka pooja for others. What is the significance of doing a Padhuka pooja? Why is it considered great? Can anyone practice Padhuka Pooja? Please enlighten us.

Generally Padhuka Pooja is very important and necessary. There are many reasons for worshipping the Padhuka. In Vaishnavism there is a Stuti 'Padhuka Sahasram'. Sri Rama's Padhuka was worshipped by Bharatha. Sri Padhuka is very special. Whatever be the kind of Dosha, when you surrender to the holy feet it will get washed away. Further a Guru's Padhuka has the quality of providing Atma Shuddhi. It can also bestow all kinds of auspicious things. God Himself has said “Maam Ekam Charanam Vraja” – hold on to the holy feet. The pooja performed for a Guru's Padhuka is considered as the pooja performed for God. Among the nine types of Bhakthi, 'Padha Sevanam' is one. Hence the Lord who has measured the world with His Padham is Ulagalanda Perumal. Since Trivikrama Swami Bhagavan Krishna was a Guru, those who surrendered at His holy feet attained Sathgathi. Hence Vyasa remained in a manner wherein Guru is God and God is Guru. When we refer to him we say 'Vyasaya Vishnu Roopaya Vyasa Roopaya Vishnave” and similarly the “Nadamaadum Deivam” Maha Periyava is God Himself. According to Me worshipping only one Padhuka (i.e. the Padhuka of one Guru) is the best. Further the Padhuka of Maha Periyava is most important and necessary. Worshipping the Padhuka of any other Guru is not required. I would say based on what is known to Me that My Atma Guru Maha Periyava's Padhuka is the greatest and it denotes the Truth. This is My personal opinion. You have said that Periyava has mentioned about this Padhuka in some place and that you have read about this. However I have not got to know this.

**மஹா பெரியவா ஏதோ ஒரு இடத்தில், ஒரு குருவிற்கு மேல் வைத்துக்கொள்ளலாம், ஆனால் குரு பாதுகா பூஜை மட்டும் ஒருவருக்கு தான் செய்ய வேண்டும் என்று கூறியுள்ளதாக நான் படித்திருக்கிறேன். மேலும் வேறு யாருக்கும் பாதுகா பூஜை செய்யக்கூடாது என்றும் படித்திருக்கிறேன். இந்த பாதுகா பூஜையை யார் வேண்டுமானாலும் செய்யலாமா? பாதுகா பூஜையின் மஹிமை என்ன?**

பொதுவாக பாதுகை பூஜை அவசியமானதாகும். சரணத்தை பூஜிப்பதற்கு அனேக காரணங்கள் உண்டு. ஸ்ரீ வைஷ்ணவத்தில் பாதுகா சஹஸ்ரம் என்ற ஸ்துதி உள்ளது. ஸ்ரீ ராமபிரானின் பாதுகை பரதனால் பூஜிக்கப்பட்டது. ஸ்ரீ சரணாளின் பாதுகை விசேஷமானதாகும். திருவடியை சரணாகதி செய்வதல் எப்பேர்பட்ட தோஷங்களும் நிவர்த்தியாகிறது. மேலும் குருவின் திருவடிக்கு ஆத்ம ஸுத்தி செய்யும் யோக்யதை உள்ளது.

ஸகல மங்களத்தையும் அளிக்கக் கூடியது. பகவானே 'மாம் ஏகம் சரணம் வ்ரஜ' என்று பாதத்தை பற்று என்பதாக உள்ளது. குருவின் திருவடிக்கு செய்யும் பூஜை இறைவனுக்கு செய்யும் பூஜையே ஆகும். நவவிதமான பக்தியில் பாத சேவனம் என்ற பக்தி உள்ளது. ஆகவே பாதத்தினால் உலகத்தை அளந்தவர் உலகளந்தப் பெருமாள். த்ரிவிக்ரம ஸ்வாமி பகவான் கண்ணன் குருவாக இருந்ததால் பாதம் பற்றியவர்கள் சத்கதி அடைகிறார்கள். ஆக குருவே பகவான் பகவானே குரு என்பதாக வியாஸர் இருந்தார். அவரை குறிப்பிடும் போது வியாஸாய விஷ்ணு ரூபாய வ்யாஸ ரூபாய விஷ்ணவே என்பதைப் போல் நடமாடும் தெய்வமாகிய மஹா பெரியவா சாக்ஷாத் பகவான் தான். என்னை பொறுத்தவரை ஒரு பாதுகையை (அதாவது ஒரு குருவினுடைய பாதுகைகளை) வைத்து பூஜிப்பது தான் சிறப்பு. மேலும் மஹா பெரியவாளின் பாதுகைகளே முக்கியமானது, அவசியமானது. வேறு எந்த குருவின் பாதுகைகளையும் வைத்து பூஜை செய்ய அவசியமில்லை. எனக்கு தெரிந்தவரை என் ஆத்ம குருவின் பாதுகைகளைத்தான் பெரிது என்றும் அது தான் ஸத்யம் என்றும் கூறுவேன். இது என் தனிப்பட்ட அபிப்ராயம். தாங்கள் பெரியவா ஏதோ ஒரு இடத்தில் இந்த பாதுகை விஷயம் பற்றி குறிப்பிட்டதாகவும், தாங்கள் படித்ததாகவும் கூறுகிறீர்கள். அது விஷயம் கூட நான் இன்னும் தெரிந்து கொள்ளவில்லை.

**38. How many times in a year can we do Ganapathi Homam in our house?**

If one has the income/wealth, Ganapathi Homam can be performed on a daily basis. Else it can be done on a good date once a month or it can be done once a year. After considering the suitability and convenience of the people at home, this Homam can be done. A separate day or Nakshatram is not required. ‘Udhayaath-Poorvam’ i.e. before sunrise it should be completed or it should be commenced before sunrise - this is the rule. If you want this to be explained in detail, the most essential or significant things can be mentioned here – i.e. the Ganapathi Homam should be performed with 4 Vaitheega’s and Arugampul, Nel Pori and Ghee is primary/foremost. Other than this as per your convenience there is Ashta-dravyam which is Modakam, Samith, Satthu-mavu, Appam, White Yel Urundai, Karumbhu-thundu, Fruits mixed with honey and Annam - these can be offered in the Homam. This is clearly explained in the Ganapathi

Atharvashirsham (Upanishad).

**ஒரு ஆண்டில் எத்தனை முறை வீட்டில் கணபதி ஹோமம் செய்யலாம்?**

கணபதி ஹோமம் வசதிகளிருப்பின் நித்யப்படி செய்யலாம். அல்லது மாதா மாதம் ஒரு நாள் பார்த்து செய்யலாம். வருடம் ஒரு முறையும் செய்யலாம். வீட்டிலுள்ளோர் சௌகர்யத்தை அனுசரித்து மட்டும் இந்த ஹோமத்தை செய்யலாம். ப்ரத்யேக நாள் அல்லது நட்சத்திரம் வேண்டாம். மேலும் உதயாத் பூர்வம் செய்வது, அதாவது சூர்ய உதயத்திற்கு முன் முடித்து விட வேண்டும். அல்லது சூரிய உதயத்திற்கு முன் ஆரம்பிக்கவும். இது தான் நியதி. அதனை விளக்கும்படி வேண்டுமானால் அவசியமானதை மட்டும் சொல்லலாம். அதாவது கணபதி ஹோமம் நான்கு வைதிகாளை வைத்து செய்யவும். அருகம்புல், நெல்பொறி, நெய் இது தான் ப்ரதானம். இது தவிர சௌகர்யமிருப்பின் அஷ்டத்ரவ்யம், அதாவது மோதகம், சமித்து, சத்துமாவு, அப்பம், வெள்ளை எள் உருண்டை, கரும்புத்துண்டு, பழங்கள், தேனும் கலந்து, அன்னம் இவற்றையும் ஹோமத்தில் ஆஹுதி செய்யலாம். கணபதி அதர்வசிஷமான உபநிஷத்தில் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

**39. Can Shiva linga pooja be performed at home and if Abhishekam milk is given to us by others can we use it? Please guide us on the right way of doing Shiva linga pooja at home.**

Worshipping Lord Shiva is important and is an essential part of Indian culture. Performing Pooja at home is very good and is also considered as a protection for the house. “Matha Cha Parvathi Devi Pitha Devo Maheshwaraha” - the status/position of the Father i.e. He is the Father for the Universe. Generally whatever divine service we render, it is for the Shreyas of the Atma alone. We do the Pooja and God accepts that. If one dislikes or hates Lord Shiva it is a great sin and there is no Prayachitham (remedy) for that. Further there is no Dosha for milk. Whatever be the form of the milk, if you are in another country you can use it (to our convenience or customize it) in the form available there and this is considered good. Abhishekham with milk or other Abhishekhams can be done at home. If other people also give it, we can use it for Abhishekham. Even if the milk available to us was made out of powdered milk, we can mix water to that and then there is no Dosha.

சிவலிங்க பூஜை வீட்டில் செய்யலாமா? மேலும் அபிஷேக பால் மற்றவர்கள் கொடுத்தால் அதில் செய்யலாமா? இதை பற்றி பலரும் பல கருத்துக்களை கூறுவதால், இதை வீட்டில் செய்ய வழிகாட்டுமாறு கேட்டு கொள்கிறோம்?

சிவ ஆராதனை என்பது தொன்று தொட்டு நம் பாரத கலாசாரத்தில் அவசியமாகிறது. வீட்டில் பூஜை செய்வது சிறப்பு. வீட்டிற்கும் ரக்ஷையாக இருக்கும். மேலும் "மாதாச பார்வதி தேவீ பிதா தேவோ மஹேஸ்வரஹ" என்ற விதியின்படி தகப்பனார் ஸ்தானம். லோகத்திற்கு அவர் தகப்பனாராகிறார். பொதுவாய் நாம் செய்யும் எந்த ஒரு இறைப்பணியும் நமது ஆத்ம ச்ரேயஸ்ஸுக்கு மட்டுமே. பூஜை நாம் செய்கிறோம் அதை ஸ்வாமி ஏற்கிறார். சிவ த்வேஷமானது மஹா பாபம். அதற்கு ப்ராயசித்தம் கிடையாது. மேலும் பாலிற்கு தோஷம் கிடையாது. பால் எந்த மாதிரி கிடைத்தாலும் குறிப்பாக அந்நிய தேசத்திலிருப்பதால் அங்கு உள்ளபடி நம் சௌகர்யத்தை மாற்றி கொள்வது சிறப்பு. வீட்டில் பால் அபிஷேகம் மற்ற அபிஷேகம் செய்யலாம். மற்றவர்கள் கொண்டு கொடுத்தாலும் அதை வாங்கி அபிஷேகம் செய்யலாம். பால் பவுடர் பாலாக இருப்பினும் அதனுடன் தண்ணீர் கலந்து விட்டால் தோஷம் கிடையாது.

**40.What is the significance of Panchayatana Pooja?**

Panchayatana Pooja is performed for Atma Shuddhi. The primary deities in a Panchayatana Pooja are that of Lord Ganesha, Suryan, Shakthi, Shiva and Vishnu. Since we worship/celebrate six deities representing Shan matam, we include Lord Subramaniar also. Traditionally Panchayatana Pooja was performed after taking Japam of the three deities - Ganapathy, Shakthi and Shiva. Later on Vishnu, Suryan and Murugan were included and then Panchayatana Pooja was performed. Ganapathy represents earth, Shakthi represents wind, Shiva represents fire, Suryan represents space and Vishnu represents Water - for worshipping the Pancha Bhootas we perform this. Further pooja performed at home is for those who are unable to visit the temples and/or in occasions or situations where one may not be able to visit the temple. For this purpose, this has been kept as a customary practice or routine and as a matter of convenience. Since Lord Muruga represents the Karana Bhootha,

including Lord Muruga also in the Panchayatana Pooja would render special benefits.

பஞ்சாயதன பூஜையின் முக்கியத்துவம் என்ன?

பஞ்சாயதன பூஜை செய்வது ஆத்மஸுத்திக்கு மற்றும் கணபதி. சூர்யன். சக்தி. சிவன். விஷ்ணு இவர்களே பஞ்சாயதன பூஜையின் ப்ரதான மூர்த்திகளாகும். ஷண்மதங்களாக ஆறு மூர்த்திகளை கொண்டாடுவதினால் சுப்ரமண்யரை சேர்த்துக் கொள்ளலாம், பஞ்சாயதன பூஜை ப்ராசினமாகவே கணபதி, சக்தி, சிவ மூர்த்திகளின் ஜபம் எடுத்துக்கொண்டவர்கள் செய்து வந்தனர், பிற்பாடு வந்தது விஷ்ணு, சூர்யன். முருகன் எல்லாம் சேர்ந்து பஞ்சாயதன பூஜை செய்கிறார்கள். பூமிக்கு கணபதி. காற்றுக்கு சக்தி. நெருப்புக்கு சிவன். ஆகாஸத்திற்கு சூர்யன், ஜலத்திற்கு விஷ்ணு என்று பஞ்ச பூதங்களின் ஆராதனையாக இதை வழிபடுகிறோம் மேலும் வீட்டு பூஜை என்பது ஆலயத்திற்கு போக முடியாதவர்களுக்காகவும். சில சந்தர்ப்பத்தில் ஆலயம் செல்ல முடியாது போனால் அதற்காக வேண்டி இதை வழக்கத்தில் வைத்துக் கொண்டால் சௌகர்யமாயிருக்கும். காரண பூதராக இருப்பதால் முருகனையும் சேர்த்து செய்வது தான் விசேஷம்.

**41. Can men perform Gayathri homam at home? Is there any specific way on how it needs to be performed?**

Generally when Gayathri Homam has to be done, the house has to be kept clean and then it should be performed. By using ‘Gomium’ and ‘Gomutram’ it has to be cleaned and by keeping the place very very pure, performing it at home is considered superior. On a monthly basis it can be done at home, but for doing this, Sandhya Vandanam should be performed thrice a day without fail (i.e. one would be eligible to perform the homam at home, if one does Sandhya VandanVandanam thrice a day without fail). By doing Gayathri Homam, one would obtain the eligibility of performing all the 42 Samskaras. The Kreedam among all Yagams is the Gayathri Yagam which is considered most superior. To do it at home, follow the procedures mentioned above.

ஆண்கள் காயத்திரி ஹோமம் வீட்டில் செய்யலாமா? அதற்கு

ஏதேனும் தனிப்பட்ட விதிமுறை உண்டா?

பொதுவாக காயத்ரி ஹோமம் செய்வது வீட்டை சுத்தமாய் வைத்துக் கொண்டு செய்ய வேண்டும். கோமியம் மற்றும் கோமூத்ரம் மூலம் சுத்தம் செய்வது மிக மிக பவித்ரமான இடத்தை வைத்துக் கொண்டு வீட்டிலேயே செய்வது சிறப்பு. மாதா மாதம் கிருஹத்தில் செய்யலாம் ஆனால் இதை செய்வதற்கு மூன்று வேளையும் ஸந்த்யா வந்தனம் தவறாது செய்து வருவதனால் இந்த காயத்ரி ஹோமத்தை வீட்டில் செய்ய தகுதி உண்டு. காயத்ரி ஹோமம் செய்வதால் நம்முடைய அனைத்து ஸம்ஸ்காரங்களான 42 ஸம்ஸ்காரங்களும் செய்ய அருகதையை பெற முடியும். யாகங்களில் கிரீடமானதான இந்த காயத்ரி யாகமே தலைசிறந்து விளங்குகிறது. வீட்டில் செய்ய மேற்கூறிய அறிவுரைகளை பின்பற்றுங்கள்.

**42. Should we only use a Thunai Villaku to light a lamp for Villaku Pooja or can we use the match stick also? Elders tell us a lot of rules to be followed for a Pooja and sometimes it is so confusing to follow so many frequently changing rules. Also while doing Pooja, if we do anything wrong like lighting a lamp using a match stick or keeping the Mani on the floor instead of a plate etc. is this a mistake? How can we correct such mistakes?**

For lighting a lamp, using another/separate Thunai Villaku ('Kai Deepam' with one thiri or wick) is considered superior. By lighting a lamp, several benefits can be obtained. Lighting a lamp and worshipping God is the tenet in our Hindu religion. Only a Thunai Villaku should be used for lighting a lamp. Even for keeping the Pooja Mani (Bell), if you buy an appropriate (small) plate for the Pooja Mani, then there would be no chance of mistakes to occur. The words of our elders are part of our culture and tradition. For the Doshas which could arise in the Vilakku Pooja there is a Prarthanai Mantra. That should necessarily be told at the end of the Pooja. In the Pooja Book, towards the end of the Pooja, there is a Prarthanai Mantra and you can recite this.

விளக்கு பூஜையின் போது துணை விளக்கு கொண்டு தான் தீபம் ஏற்ற வேண்டுமா அல்லது தீக்குச்சி பயன் படுத்தாலாமா? பெரியவர்கள் பூஜை விதிமுறைகள் பல கூறுவதால் குழப்பமாக உள்ளது (இது போல் தீக்குச்சி கொண்டு விளக்கேற்றுவது மற்றும் தரையில் பூஜை மணியை வைத்து தட்டில் வைக்காமல் இருப்பது). இது போன்ற தவறுகள் நடந்தால்

அதற்கு என்ன தீர்வு?

தீபம் ஏற்றுவது வேறு ஒரு துணை விளக்கான ஒரு திரியுடன் கூடிய கை தீபத்தில் ஏற்றி வைப்பது தான் சிறப்பு. விளக்கு ஏற்றி வைப்பதால் பல விதமான நல்ல பலன்கள் கிடைக்கிறது. தீபம் ஏற்றி வழிபாடு நடத்துவது தான் நம் இந்து மதத்தின் கோட்பாடு ஆகும். துணை விளக்கை கொண்டு தான் தீபத்தை ஏற்ற வேண்டும். பூஜை மணியை முன்கூட்டியே ஒரு தாம்பாளத்தில் வைத்து விட அதற்குண்டான சிறிய தாம்பாளத்தை வாங்கிவிட்டால் தவறு ஏற்பட வாய்ப்பே இல்லை. பெரியவர்கள் வாக்கு தான் நம் பண்டைய கலாச்சாரம், நாகரீகம். விளக்கு பூஜையில் ஏற்படக்கூடிய மந்த்ர லோபங்களுக்கும், தோஷங்களுக்கும் ப்ரார்த்தனை மந்திரம் என்று உள்ளது. அதை அவசியம் பூஜை முடிவில் கூறவேண்டும். புத்தகத்தில் பூஜை முடிவில் ப்ரார்த்தனை மந்திரம் உள்ளதை கூறுங்கள்.

**43. Gho Pooja is done to the mother cow and her calf together and never to the cow separately. Is there any reason behind this?**

When we say 'Gho Pooja' it means worshipping the Gho (cow) and calf together. Only when we worship the calf along with its mother can it be referred as Gho Pooja. Since "Muppadu Mukkodi Thevargal" reside in the Ghomatha (i.e. mother cow), worshipping it is considered special. Further in Sanathana Dharma, it is mentioned that protecting cows and nurturing cows is a meritorious deed (and the merit is passed on for many generations) apart from bestowing prosperity and welfare to the entire world. Gho Pooja and Gho Rakshanam is a great Punya. Even in the Vedas there is a special mantra known as "Gho Sooktham". The calf and the mother which has given birth to it - when these two are worshipped together it is called as 'Gho Pooja'.

கோபூஜை என்று சொன்னாலே கன்றும் தாய் பசுவையும் சேர்த்துதான் பூஜிக்கிறோம். இதற்கு ஏதேனும் காரணம் உண்டா?

கோபூஜை என்று சொன்னாலே கன்றுடன் கூடிய பசுவை தான் பூஜிக்க வேண்டும். கன்றோடு தாயை பூஜித்தால் தான் அது

கோபூஜை ஆகும். கோமாதாவாகிய பசுவிடம் முப்பது முக்கோடி தேவர்களும் வசிப்பதால் இதை பூஜிப்பது விஷேமாகும். மேலும் ஸனாதான தர்மத்தில் பசுவை பாதுகாப்பது, பசுவை வளர்ப்பது பல தலைமுறைகளுக்கு பெரும் புண்யம் என்பதை விட லோகமே ஷேமத்தை அடையும் என்பது தான் கூறப்பட்டிருக்கிறது. கோபூஜை மற்றும கோரக்ஷணம் மகத்தான புண்யமாகும். வேதத்திலும் கோசூத்தம் என்று மகத்தான மந்திரம் உள்ளது. கன்றுடன் ஈன்ற பசுவை பூஜித்தால் தான் கோபூஜை ஆகும்.

**44. How should we clean a silver Shri Yantra and what is the right procedure to take care of it?**

The procedure for purifying (cleaning) the silver Shri Chakra is as follows - The Shri Chakra should be washed with water on a daily basis and then Chandanam and Kumkumam should be kept on it. Daily Pooja should be performed for the Sri Chakra. The Shri Chakra should not be cleaned with tamarind or lemon. It should not be dipped in milk also. Getting Srividya Upadesham for performing Shri Chakra Pooja is not required and is unnecessary. For performing Shri Chakra Pooja, purity in the heart alone is enough. Shri Chakra in silver is considered the best. The Shri Chakra should not be kept in a slanting position, rather it should be kept in a manner where it remains flat (equal) on all sides. Abhishekham can be performed on a daily basis. Ordinary water can be used for washing the Shri Chakra. For it to remain bright you can use Vibhuthi. It is purity of the heart which is most important for this Pooja. Performing Shri Chakra Pooja with ‘Lalitha Trisati’ alone would bestow several benefits. Since it serves as the foremost among all Gods (‘Aadara Shakthi’) performing Shri Chakra Pooja alone would render benefits. This is My personal opinion.

வெள்ளி ஸ்ரீசக்ரத்தை சுத்தப்படுத்தும் முறை என்ன?

வெள்ளி ஸ்ரீசக்ரத்தை சுத்தப்படுத்தும் விதம் முறை யாதெனில் ஸ்ரீசக்ரத்தை சுத்தப்படுத்துவது நித்தியமும் தண்ணீரில் கழுவி சந்தனம், குங்குமம் இட வேண்டும். ஸ்ரீசக்ரம் நித்ய பூஜை செய்ய வேண்டும். ஸ்ரீசக்ரத்தை புளியோ, எலுமிச்சை பழமோ கொண்டு தேய்க்ககூடாது. பூஜையில் உள்ளதை பாலில் போடவும் கூடாது. ப்ரத்யேகமாக ஸ்ரீவித்யா உபதேசம் பெற்று பூஜை செய்வது அனாவசியம். ஸ்ரீசக்ரத்தை பூஜை

செய்வதற்கு மனதூய்மை (அகத்தூய்மை) மட்டும் போதும். வெள்ளி ஸ்ரீசக்ரம் சிலாக்கியம். மேலும் ஸ்ரீசக்ரத்தை நிமிர்த்தி வைக்காது சமமாக இருக்கும்படி வைக்க வேண்டும். தினமும் அபிஷேகம் செய்யலாம். சாதாரண தண்ணீரில் சுத்தம் செய்து பூஜிக்கலாம். பளிச்சென இருக்க விபூதியை கொண்டு தேய்க்கலாம். புறத்தூய்மை, அகத்தூய்மை தான் பூஜைக்கு அவசியம். ஸ்ரீசக்ரத்தை லலிதா த்ரிசதி மட்டும் சொன்னால் பலன் உண்டு. எல்லா தெய்வங்களுக்கும் அதுவே ப்ரதானமாக இருப்பதால் (ஆதார சக்தியாக இருப்பதால்) ஸ்ரீசக்ரத்தை மட்டுமே பூஜித்தால் பலன் உண்டு. என் தனிப்பட்ட கருத்தாகும்.

**45. In Ganapathi Homam, an image of Ganapathi is made out of turmeric only and I have not seen an idol of silver or even Panchaloka being used. Is there any reason for this?**

In general, not only during Ganapathi Homam but even during all other Hindu functions worshipping the image of Ganapathi made out of turmeric is followed as a practice. As per the Shastras, it is mentioned that if we begin anything with Ganapathi which is made out of the auspicious substance of 'Turmeric' then all our actions will be favourable for us. Even in few Puranas, there is a mention that Goddess Parvathi created a form out of turmeric and gave life to it and used it for Her protection. When Lord Shiva came there and he was not allowed inside, Lord Shiva cut this form 'Murthi'. Later an elephant which was lying with its head on the north side was used (i.e. the elephant's head) to bring back life to this form 'Murthi' by Lord Shiva. Hence the Ganapathi which is made out of turmeric (in the form of an elephant's face) is worshipped and this is practiced. Even if many people say many stories, if we believe in the Shastras and Vedic Pundits tell us to worship this in our functions, this should be followed. Ganapathi made out of turmeric is worshipped and celebrated for hundreds of years. Ganapathi made out of turmeric is considered to be very good.

கணபதி ஹோமத்தின் போது மஞ்சளினால் செய்த பிள்ளையாரை வைத்து மட்டுமே பூஜை செய்கிறார்கள். வெள்ளி மற்றும் பஞ்ச லோகத்தினால் செய்த பிள்ளையார் விக்ரஹங்களை வைத்து செய்வதில்லை. இதற்கு ஏதேனும் ப்ரத்யேக காரணம் உண்டா?

பொதுவாக கணபதி ஹோமம் செய்யும் போது மட்டும் இல்லாமல் அனைத்து இந்து மத சடங்குகளுக்கும் மஞ்சளினால் வினாயகர் செய்து வழிபடுவது வழக்கம் ஆகும். சாஸ்த்திரத்தில் மஞ்சள் பிள்ளையாரை மங்களகரமான பொருளான மஞ்சளைக் கொண்டு ஆரம்பித்தால் எல்லா கார்யங்களும் மங்களகரமாயிருக்கும். ஒரு சில புராணத்தில் பார்வதி மஞ்சள் மூலம் ஒரு உருவத்தை பிடித்து வைத்து உயிர் கொடுத்து காவலுக்காக வைத்து பிறகு சிவபெருமானை அனுமதிக்காத அந்த மூர்த்தி அவரால் வெட்டுப்பட்டு பிறகு வடக்கு தலை வைத்து படுத்திருக்கும் ஒரு யானையின் தலையை கொண்டு பரமேஸ்வரன் வைத்து உயிர் கொடுத்ததாகவும் அதனால் மஞ்சளில் பிள்ளையாரை யானைமுகமாக உருவம் செய்து பூஜிப்பது வழக்கம். பலரும் பல கதைகளை சொன்னாலும் சாஸ்த்திரத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் வைதீக கார்யங்களில் வேத வித்வான்கள் இதை பூஜிக்க சொல்கிறார்கள். மஞ்சள் பிள்ளையார் என்பது பல நூற்றாண்டுகளாக கொண்டாடப்படுகிறது. மஞ்சள் பிள்ளையார் தான் சிலாக்யமானது.

**46. I am keen to do Anusham Pooja for Maha Periyava to start with on a basic level. Could you advice beginners on the procedures which are required to be followed?**

Performing pooja during Anusham is very essential and is considered as Dharma. Only those who have the grace and blessings of Maha Periyava can do Pooja during Anusham. Pooja to Maha Periyava can be done by anyone. For Him, it is enough if the Pooja is performed sincerely. Even when the picture of Maha Periyava is small, if one reads the Totakashtakam, does Namaskaram 8 times, reads the Ashtothram of Maha Periyava and does Neivedhyam with even Kalkandu, it is enough. Reading the Upadesha of Maha Periyava is very important and is required. Reading one portion (like one chapter) of Deivathin Kural on every Anusham it considered good. The Nithya Karmanushtam should be done without fail on the day on which Anusha Pooja is performed.

Commencing Anusha Pooja is definitely a great blessing. What Periyava expects from us is that we should follow the path of Dharma. We should read the Ashtothram of Periyava. On the day when this Pooja is done, one should not eat outside (in shops). Since

‘Muppadu Mukkodi Thevargal’ reside within Maha Periyava, to do this Pooja to the visible God in this Kali Yuga ‘Maha Periyava’, one needs to be really blessed. One has to visualize Him as the form of ‘Muppadu Mukkodi Thevargal’ and do this Pooja. Since Sri Sri Maha Periyava is the form of all Devatha this Pooja should be done on the day of ‘Anusha’ Nakshatram. As soon as you had asked the procedure to be followed for doing Anusha Pooja, My Atma Guru Sri Sri Maha Periyava has showered His Poorna Anugraham on you and if your Pooja is done sincerely acceptance of that is certain.

**எனக்கு மஹாபெரியவாளுக்கு அனுஷ பூஜை செய்ய விருப்பம். என்னை போல் ஆரம்ப நிலையில் இருப்பவர்களுக்கு உங்கள் அறிவுரை மற்றும் வழிமுறை என்ன?**

அனுஷம் அன்று பூஜை செய்வது மிக மிக அவசியமானது தர்மமானது. அனுஷ பூஜை செய்ய மஹா பெரியவா அனுக்ரஹம் உள்ளவா மட்டுமே தான் செய்ய முடியும். மஹா பெரியவா பூஜையை யார் வேண்டுமானாலும் செய்யலாம். அவருக்கு செய்யும் பூஜை ஆத்மார்த்தமாக இருந்தால் போதுமானது. மஹா பெரியவா படம் சிறியதாயிருந்தாலும் சரி தோடகாஷ்டகம் படித்து விட்டு 8 முறை நமஸ்காரம் செய்துவிட்டு பெரியவா அஷ்டோத்திரத்தைப் படித்து விட்டு கல்கண்டு கூட நைவேத்யம் செய்தால் போதுமானது. பெரியவா உபதேசங்களை படிப்பது அவசியம். ஒவ்வொரு அனுஷம் போதும் தெய்வத்தின் குரலில் ஒரு பகுதியான ஒரு விஷயத்தை மட்டும் (ஒரு சாப்டர்) படிப்பது சிலாக்யம்.

அனுஷ பூஜை செய்கிற அன்று நித்ய கர்மானுஷ்டானங்களை தவறாது கடைபிடிக்க வேண்டும். அனுஷ பூஜையை ஆரம்பிப்பது கொடுப்பினை தான். பெரியவா நம்மிடம் எதிர்பார்ப்பது தர்மப்படி நடப்பது தான். பெரியவாளின் அஷ்டோத்திரம் படிக்க வேண்டும். அனுஷ பூஜை செய்யும் அன்று கண்டிப்பாக வெளியில் (கடைகளில்) சாப்பிட கூடாது. பெரியவாளிடம் முப்பத்து முக்கோடி தேவைதைகள் குடி கொண்டிருப்பதால் இந்த பூஜை கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாயிருப்பதால் மஹா பெரியவாளுக்கு செய்வது மிக மிக ப்ராப்தம் வேண்டும். முப்பத்து முக்கோடி தேவர்கள் ஸ்வரூபமாக பாவித்து பூஜை செய்ய வேண்டும். ஸ்ரீ ஸ்ரீ மஹா பெரியவா ஸகல தேவதா ஸ்வரூபமானதால் அனுஷ நட்சத்திரத்தன்று பூஜை செய்யவும். இந்த பூஜையை ஆரம்பிக்கலாமென்று முறையை கேட்ட உடனேயே எனது

ஆத்ம குருவாகிய ஸ்ரீ ஸ்ரீ மஹா பெரியவா உனக்கு பூரண அனுக்ரஹத்தைக் கொடுத்து உன் பூஜையை மானசீகமானதாகயிருப்பின் ஏற்றுக் கொள்வது திண்ணம்.

**47. Why is Kushmanda Homam performed? Is this generally done before Srardham and all auspicious homams?**

When we say there are 40 Karmas it actually means the 40 Samskaras. There is no karma without Agni (fire). Performance of the karma with Agni is there in all the castes. For attaining purity of the Atma (Jeevatma) we have these 40 Samskaras. It is mentioned that there are 400 Yagnas in the Vedas. All that is offered (Ahuthi) in the Agni is called as ‘Havis’. It is mentioned as “Avi” in the Tamil writings like Thirukural also. But still, ghee is specifically called as ‘Havis’. In the “Aupasana Agni”, the Kushmanda Homam should be performed once at some point in time along with the wife before the Srardham. For washing away all the sins caused due to the feelings in our heart, the words we use, the physical body, Kushmanda Homam should be performed before the Srardham and then the Srardham can be performed. It is beneficial only when the Kushmanda Homam is performed once at some point in time; that too near the Srardham period.

**கூஸ்மாண்ட ஹோமம் ஏன் செய்கிறார்கள்? பொதுவாக இந்த ஹோமம் ஸ்ரார்த்ததிற்கு முன்பும் பல ஹோமங்களுக்கு முன்பும் செய்ய வேண்டுமா?**

நாற்பது கர்மாக்களைத்தான் நாற்பது ஸம்ஸ்காரம் என்கிறோம். அக்னி கார்யமில்லாத கர்மா இல்லை. எல்லா ஜாதியாருக்கும் அக்னி கார்யம் உண்டு. ஜீவாத்மாவிற்கு பரிஸுத்தி ஏற்படுவதற்கு வேண்டிதான் நாற்பது ஸம்ஸ்காரங்கள். வேதத்தில் 400 யக்ஞங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. அக்னியில் ஆஹுதி செய்கிற எல்லாவற்றிற்கும் ஹவிஸ் என்று பெயர். அவி என்று திருக்குறள் முதலான தமிழ் நூல்களில் சொல்லியிருக்கிறது. ஆனாலும் குறிப்பாக நெய்க்கு ஹவிஸ் என்ற பெயர் உள்ளது. ஔபாஸன அக்னியில் கூஸ்மாண்ட ஹோமம் பத்னியுடன் எப்பவாவது ஒரு முறை ஸ்ரார்த்ததிற்கு முன் செய்ய வேண்டும். தனிப்பட்ட முறையில் அனேக பாபங்கள் மனஸாலும் வாக்காலும், சரீரத்தாலும் செய்த பாபங்கள் நிவர்த்தியாக கூஸ்மாண்ட ஹோமம் ஸ்ரார்த்ததிற்கு முன் செய்து விட்டு

ஸ்ரார்த்தம் செய்யலாம். கூஸ்மாண்ட ஹோமம் எப்பவாவது ஒரு முறை செய்வது தான் பலன், அதுவும் ஸ்ரார்த்ததிற்கு ஒட்டி செய்யனும்.

**48. How do I perform pooja to a Meru made out of spatikam?**

Worshipping Meru has special significance. Obtaining Upadesha from a Guru and performing this pooja is considered as Dharma. There is nothing wrong in doing pooja to Meru in the form of spatikam. It is superior when we perform the pooja after understanding the procedure and obtaining Upadesha. Meru can be in any world. When the pooja is performed knowing its importance and meaning, the full benefit can be attained. Meru is the form of Goddess Ambal. One can attain bliss when the pooja is performed after obtaining the Srividya Upadesha. When the pooja is performed as per the prescribed procedure it is considered auspicious.

**ஸ்படிக மேருவுக்கு எப்படி பூஜை செய்ய வேண்டும்?**

மேருவை பூஜிப்பது விசேஷம். குரு மூலமாக உபதேசம் பெற்று பூஜிப்பது தர்மம். ஸ்படிக மேரு பூஜிப்பதால் தப்பு இல்லை. முறையையும் உபதேசத்தையும் தெரிந்து கொண்டு செய்வது சிறப்பு. மேரு எந்த ஒரு லோகத்திலும் இருக்கலாம். மேருவை பூஜிப்பதில் நியமம் அவசியமாகிறது. தெரிந்து செய்யும் பூஜைக்கு பூரண பலன் உண்டு. அம்பாளின் ஸ்வரூபமே மேரு. ஸ்ரீவித்யா உபதேசம் பெற்று செய்யும் போது பரமானந்தம் ஏற்படும். க்ரமப்படி செய்வது சுபம்.

**49. What are some of the pooja norms like direction to face while praying, time of prayer, lamp direction, what kind of oil to use, which days are special to which God, etc.**

Pooja is a Yagnam which is performed earnestly. To make ourselves pure, the pooja is conducted by means of chanting slokas, performing Archanai, etc. All Gods and Goddesses reside in the body of the holy cow, but we are able to obtain milk only from a certain place. Similarly God is Omnipresent, but the grace of God can be obtained only in the temple premises. Also God is present everywhere in our house, but we can obtain the sanctity of God only in the pooja room.

When we want to perform Pooja or learn any procedures, we should strictly follow what has been performed by our ancestors.

Whichever direction God is, we should be seated on the right side of that direction. For example if God is facing east, we should be seated facing north.

Further using gingelly oil (Nal-ennai) for lighting the lamp is considered good. Using ghee for lighting the lamp is also good.

To perform meditation, early morning time is ideal. Further even if we meditate for a minute, if it is done with deep concentration and sincerity it is considered most superior. Deep meditation is 'Prayer'. All days are good for all Gods. We should not relate God to a particular day. We should worship all Gods on all days. The time of worship is important and not the day and to fear about this is unnecessary.

**பொதுவாக பூஜை செய்யும் முறைகள் என்ன?**

பூஜை என்பது ஆத்மார்த்தமாக செய்யப்படும் ஒரு யக்ஞும், நம்மை பவித்ரமாக்கிகொள்ள ஸ்லோகம், அர்ச்சனை போன்ற முறைகளுடன் செய்யப்படுவது. பசுவின் சரீரத்தில் அனைத்து தெய்வங்களும் வஸிக்கிறது ஆனால் நாம் ஓரிடத்திலிருந்துதான் சுவையான பாலை பெற முடிகிறது அதைப்போல் கடவுள் எல்லா இடத்திலும் வ்யாபித்து இருந்தாலும் கோவில் என்ற ஓரிடத்தில்தான் அருளைப் பெற முடியும் அதைப்போல் தான் வீடு முழுதும் கடவுள் நிறம்பி இருந்தாலும் பூஜை அறையில் தான் சாந்நித்யத்தை பெறமுடியும்.

பூஜை முறை என்பது அவரவர்கள் முனனோர்கள் கடைபிடித்து வந்ததைத்தான் கடைபிடிக்க வேண்டும். பகவான் எந்த திசையிலிருந்தாலும் பகவானுக்கு வலப்புறம் தான் நாம் அமர வேண்டும் உதாரணத்திற்கு கிழக்கு பக்கம் பார்த்து பகவான் இருந்தால் நாம் வடக்கு பார்த்து அமரனும் மேலும் நல்லெண்ணை தீபம் போட்டு வர சிறப்பு. நெய் தீபம் கூட ஏற்றி வைப்பது சிறப்பு.

த்யானம் செய்வது கூட அதிகாலை நேரம் உகந்தது. மேலும் ஒரு நிமிடமானாலும் அதில் ஆழ்ந்திருந்து த்யானிப்பது சிறப்பு. தினமும் எல்லா கடவுளையும் தான் வழிபட வேண்டும். வழிபடும் நேரம் தான் அவசியம், நாள் அத்யாவஸியம் இதை பற்றி பயப்படுவது

அநாவஸியம்.

**50. Can you explain the significance of doing Thiru Vilakku Pooja?**

When you light the lamp (Vilakku), ignorance will go away. The inner and the outer self would be purified. The light would help us in worshipping (seeing) God in the temple. The light is a form of God. When we light the lamp, our problems would reduce and we would lead a much happier and peaceful life. “Muppuri-nool” (sacred thread with three strands) denotes the qualities of Arrogance, Vengeance and Maya. It also denotes the three bondages. Tri Shakthi – ‘Iccha’, ‘Gnana’, ‘Kriya’ – the three Shakthi’s represent the three wicks/thiris and when you join the three wicks into a single wick and light the lamp, the three bondages would be destroyed and wisdom can be gained. When you split the cotton (wick) into three wicks and make it into a single one and light the Kamakshi lamp with one mugam, it is considered superior. Just through Her Kataksham, Goddess Kamakshi would fulfill all your desires. Lighting the Kamakshi Vilakku would bestow special benefits.

**திருவிளக்கு பூஜையின் மஹிமை என்ன?**

திருவிளக்கு ஏற்றி வைப்பதால் அக்ஞானம் அகலும். அகமும், புறமும், புனிதமாகும். தீபம் ஆலயத்தில் உள்ள மூர்த்தங்களை தரிசிக்க உதவுகிறது. தீப ஒளி தான் பகவத்ஸ்வருபம். தீபம் ஏற்றி வைப்பதால் நமக்குண்டான சிரமம் குறைந்து ஆனந்தமும் அமைதியும் கிட்டும். முப்புரி நூல் என்று சொல்வது ஆணவம், கன்மம், மாயை, மும்மலங்களை குறிக்கும், த்ரிசக்தி அவை இச்சா, ஞான, க்ரியா, 3 சக்திகளும் ஒருங்கே அமைந்து த்ரிவர்த்தி 3 திரியை ஒன்றாக்கி அதில் தீபம் ஏற்றி வைத்தால் மும்மலங்கள் அழிந்து ஞானம் பெற முடியும். பஞ்சுத்திரியை திரித்து 3 திரியை ஒன்றாக்கி ஒரே முகமாக காமாக்ஷி விளக்காக ஏற்றிவைத்தால் சிறப்பு. விருப்பத்தை கடாக்ஷத்தினாலேயே பூர்த்தி பண்ணக்கூடியவள் காமாக்ஷி. அவ்விளக்கு ஏற்றி வைப்பது விசேஷ பலன் உண்டு.